ஶ்ரீ: ॥

𑌧𑌰𑍍𑌮𑌨𑌿𑌰𑍍𑌣𑌯𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌿𑌕𑌾 ॥

தர்மநிர்ணயப்ரகாசிகா.

திருக்குடந்தை [illegible] ஐயங்கார் தெரு

திருமலை லக்ஷ்மீகுமாரகோடிகன்யகாதானம்

வாஜபேயம், வே. ஸ்ரீநிவாஸதாதாசாரியர்

இயற்றியது.

கும்பகோணம்

சாரதா விலாஸ அச்சுக்கூடத்தில்

அச்சிடப்பட்டது.

விலை] 1932. [0—3—0.

உ

முகவுரை.



ஸ்ரீவைஷ்ணவ பண்டிதர்களுள் விவாதத்திலிருந்துவரும் ஸமாவர்த்தன விஷயமாக அடியேனால் முன் வெளியிடப்பட்ட தர்மசாஸ்த்ர நிர்ணயம் என்கிற பிரசுரத்திற்கு மறுப்பாக வெளிவந்த சில பிரசுரங்களில் கண்ட விஷயங்களெல்லாம் சாஸ்த்ரத்திற்கும், ஆசாரத்திற்கும் விருத்தமென்றும் கேவலம் அஜ்ஞானத்தினலேயே எழுதப்பட்டதென்றும், அடியேன் நிரூபித்து எழுதிய தர்மநிர்ணய ப்ரகாசிகா என்கிற ஸஞ்சிகையை அடியேன் கும்பகோணம் சாரதா விலாஸ அச்சுக்கூடத்தில் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறேன். இதைக் கடாக்ஷித்தருளும் வலயபேட்டை ஸ்ரீஸ்வாமியோ, ததீயர்களோ நேரான வழியில் சாஸ்த்ரீக பண்டிதர்கள் ஒப்புக்கொள்ளும்படி பதில் ஸஞ்சிகை வெளியிட்டால் லோகோபகாரமாகவிருக்கும். அப்படியே செய்யவேணுமாக ப்ரார்த்திக்கிறேன். அப்படிச் செய்யாமல் வசைமொழி கொடுப்பார்களேயாகில் அதுவும் அடியேனுக்கும் பிரகாசிகைக்கும் ஏற்றமே.

இப்படிக்கு,

வே. ஸ்ரீநிவாஸ தாதாசாரியர்,

ஸ்ரீ கோமளாம்பா பிரஸ் புரொப்ரைட்டர்.

கும்பகோணம்,
4—1—32.



𑌶𑍍𑌰𑍀𑌃 ॥

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌶𑍍𑌰𑍀𑌵𑍀𑌰𑌰𑌾𑌘𑌵𑌤𑌾𑌤𑌦𑍇𑌶𑌿𑌕𑌮𑌹𑌾𑌗𑍁𑌰𑌵𑍇 𑌨𑌮𑌃 ॥

𑌶𑍍𑌰𑍀𑌕𑍋𑌮𑌲𑌵𑌲𑍍𑌲𑍀𑌨𑌾𑌯𑌿𑌕𑌾𑌸𑌮𑍇𑌤

𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑌪𑌰𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌾𑌮𑍃𑌤𑌶𑌾𑌰𑍍𑌙𑍍𑌗𑌪𑌾𑌣𑌯𑍇 𑌨𑌮𑌃 ॥

[illegible] ॥



𑌧𑌰𑍍𑌮 𑌏𑌵 𑌹𑌤𑍋 𑌹𑌨𑍍𑌤𑌿 𑌧𑌰𑍍𑌮𑍋 𑌰𑌕𑍍𑌷𑌤𑌿 𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌃 ॥

[illegible] ॥ ௨ ॥

[illegible] ॥ ௩ ॥

[illegible] ॥ ௪ ॥

[illegible]

[illegible] 𑌵𑍀𑌰𑌰𑌾𑌘𑌵𑌗𑍁𑌰𑍁𑌂 [illegible] ॥

[illegible]
[illegible]
[illegible] ॥

[illegible]
[illegible] ॥ ॥௯॥

[illegible]
[illegible] ॥
[illegible]
[illegible] ॥ ॥௧௦॥

[illegible]
[illegible] ॥ ॥௧௧॥

[illegible]
[illegible] ॥
[illegible]
[illegible] ॥௧௩॥

[illegible]
[illegible] ॥

[illegible]
[illegible] ॥ ॥௧௪॥

அவதாரிகை.

ஆஸ்திகோத்தமர்களான ஸ்ரீவைஷ்ணவர்களின் தாஸனாகிய அடியேன் ஸுதீஜநர்களின் ஸந்நிதியில் செய்யும் விஜ்ஞாபனமாவது:—

நாளது பிரஜோத்பத்தி௵ ஆடி௴ 3௳யில் [illegible] என்கி[illegible] ஒரு பிரசுரத்தை யான்

வெளியிடவேண்டிய ஆவச்யகம் ஏற்பட்டது. அதிலடங்கிய விஷயமென்னவெனில்; ஜ்யேஷ்ட ஸபிண்டனின் மரணத்தை கனிஷ்ட ஸபிண்டன் அதின் 10-வது தினம் பகலில் தன் போஜனத்திற்குப் பிறகு தெரிந்துகொண்டாலும் உடனே கட்டாயம் க்ஷௌரம் செய்துகொண்டேதான் சூரியாஸ்தமனத்திற்குள் தர்ப்பணம் செய்யவேண்டும். க்ஷௌரம் செய்துகொள்ளாவிட்டால் மறுநாள் நீட்டுக்கழியாது என்பதுதான் தர்மசாஸ்த்திரங்களிலிருந்து ந்யாயவாதிவழக்கவிசாரத்தினால் கிடைக்கும் பரமதாத்பர்யம். இதுவேதான் யதிஸார்வபௌமஜீயர்களான பெரியோர்களின் அபிப்பிராயமும். இதற்கு மாறான அபிப்பிராயத்தையோ இதைத்தழுவிய அபிப்பிராயத்தையோ திருவுள்ளம் பற்றும் பெரியோர்கள் தங்கள் அபிப்பிராயத்தை ப்ரமாணபூர்வகமாக எழுதி அடியேனுடைய விலாஸத்திற்கு ஆடிமீ 28உ க்குள் கிருபைசெய்து அனுப்பவேண்டுமென்று பிரார்த்தித்திருந்தேன். அந்தத் தேதிக்குள் யாதொரு மறுப்புரையும் அடியேனுக்குக் கிடைக்கவில்லை. திருக்குடந்தை மன்னார்கோவில் ஸ்ரீரங்கம் முதலிய விடங்களில் நான் ஸந்தித்த பெரியோர்களிடமும் முக்கியமாய் ஸ்ரீரங்கத்தில் வராஹமஹாதேசிகர், பெரிய சிறிய அழகியசிங்கர் ஸ்வாமிகளின் ஸந்நிதியிலும், ஸ்ரீ உ.வே. திருக்கோட்டியூர் ஸௌம்யநாராயணாச்சாரியர் ஸ்வாமி ஷை யூர் ஷை கோவிந்தாச்சார் ஸ்வாமி புத்தங்கோட்டம் ஸ்ரீ உ. வே. ஸ்ரீநிவாஸாச்சாரியர் ஸ்வாமி முதலியவர்களிடத்திலும், இன்னும் அனேக சாஸ்திரிகளிடத்திலும் ஷை விஷயத்தைப்பற்றி நான் விசாரித்ததற்கு எல்லோரும் போஜனத்திற்குப் பிறகும் அவசியம் க்ஷௌரம் செய்துகொள்ளவேண்டியதே என்றும் நிமித்தம் எப்பொழுது தெரிகிறதோ அப்பொழுது நைமித்திகவபநம் செய்துகொள்வதை முன் செய்த போஜனம் தடுக்காது என்றும் ஸாதித்தார்கள். என்னுடைய தர்மசாஸ்த்ர நிர்ணயம் என்கிற பிரசுரத்தைக் கவனித்த சுமார் 500 ஸ்மார்த்த பிராம்மணர்கள், ஸ்ரீவைஷ்ணவர்கள் இவர்களுள் ஒருவராவது போஜனத்திற்குப் பிறகு நைமித்திக க்ஷௌரம் கூடாதென்று சொல்லவேயில்லை.

இப்படியிருக்க ஷெ க்ஷெளரவிஷயத்தில் விலக்ஷணுநுஷ்டானத்தைச் செய்தவரும் வலயபேட்டையில் எழுந்தருளியிருப்பவரு மான நாவல்பாக்கம் ஸ்ரீ [illegible] ஞாதிகளும் சிஷ்யர்களுமாகிய ஸ்ரீ உ. வே. வா. ச. ரங்கநாதபாட்டராச்சாரியர் ஸ்வாமியும் நாவல்பாக்கம் சிரோமணி கிருஷ்ணஸ்வாமி தாதாசாரியர் ஸ்வாமியும் திருவாதி ஸம்ஸ்கிருத காலேஜ் ப்ரொபஸர் M. O. L. திருவரங்கம் திருமலைதாதாசாரியர் ஸ்வாமியும், நாவல்பாக்கம் வித்வான் ஸ்ரீ உ.ஸ. வே. நரஸிம்மாச்சாரியர் ஸ்வாமிகளும் ஆக நால்வர்களோ என்னுல் வெளியிடப்பட்ட பிரசுரத்திற்கு மறுப்புறையாகச் சில விஷயங்களை எழுதி அச்சிட்டு ஆவணிமீ 2-உ க்குப் பிறகு வெளியிட்ட பிரசுரங்கள் எனக்குக் கிடைத்தன. அப்பொழுதே அவைகளுக்குப் பதில் எழுதி அச்சிட நினைக்கையில் இன்னும் சில பிரசுரங்கள் வரப்போகின்றன வென்று சில ஆப்தர்கள் முகமாய்த் தெரிந்ததாலவைகளும் வெளிவந்த பிறகு எல்லாவற்றிற்கும் ஒரே பதிலாக எழுதிவிடலாமென்று நினைத்துக் கொஞ்சம் தாமஸித்தேன். ஆவணிமீ 20உ யாகியும் வேறு ஒன்றும் வெளிவரவில்லை. இனி நான் தாமஸிக்கவேண்டியதில்லை என்று நினைத்து இந்த "தர்மநிர்ணயப்ரகாசிகா" என்பதை எழுத ஆரம்பித்தேன். விலக்ஷணுநுஷ்டாதாவான பெரியாரின் ஞாதிகளும் சிஷ்யர்களுமாகிய அந்நால்வர்களைத்தவிற வேறு ஒருவருமே அடியேன் பிரசுரத்திற்கு மறுப்புறை எழுத முன் வராததைக்கொண்டே போஜனத்திற்குப் பிறகு தசமதினததில் தர்ப்பணங்கமாகச் செய்துகொள்ளவேண்டிய நைமித்திக க்ஷெளரத்தை இல்லை என்பார்கள் இவ்வுலகில் இப்பொழுதும். எப்பொழுதும் இல்லையென்பதை ப்ராமாணிகர்கள் அறிவார்களென்று நம்புகிறேன். இனி ஷெ நால்வர்களின் பிரசுரங்களை விமர்சித்து பதில் எழுதுகிறேன். முதல்வர் வா. ரங்கநாதன் என்ற கையெழுத்துடன் ஒரு துண்டு நோட்டீஸையே வெளியிட்டார். அதில் கண்ட விஷயம் ஒன்றுவது பிரகிருத விசாரவிஷயமான நைமித்திக க்ஷெளர தடிஷாவவியிநிஷெதங்களுக்குக் கொஞ்சமாவது ஸம்பந்தமில்லாமல் [illegible] தன உன்மத்தாவஸ்தை

யில் பேசும் வார்த்தைகள் போலவே எனக்குத் தோன்றியது. ஆகையால் அந்த நோட்டீஸுக்கு யாதொரு பதிலும் எழுதவேண்டியதில்லையென்று ஸ்வஸ்த்த சித்தனாகிய நான் நினைத்துவிட்டேன். நான்காமவராகிய ஸ்வாமியை அடியேனும் மற்றும் அம்மங்களும் அபரதேசிகாவதாரம்போல் கருதுவதாலும் அந்தஸ்வாமி ஏதோ நாடகத்தின் பேரில் தன் பெயரால் ஒரு பிரசுரத்தை வெளியிட்டுக்கொள்ளும்படி இவர்களை அநுமதித்திருப்பதாகவே நமக்குத் தெரியவருவதாலும் ஷை ஸ்வாமி பெயரால் வெளியிடப்பட்டிருக்கும் பிரசுரத்தில் அவர்கள் ஊரில் பிரகிருதக்ஷௌர விஷயத்தில் இப்படித்தான் அநுஷ்டானம் என்கிற கதையையே முக்கியமாய் இப்பொழுது குறிப்பிட்டிருப்பதாலும், சில வசனங்களை எடுத்துச் சொல்லியிருப்பதற்கு நாம் பதில் எழுதவேண்டியதை மற்றிருவர்களுடைய பிரசுரங்களுக்குப் பதில் எழுதுவதுடன் சேர்த்துவிடப்போகிறபடியாலும் அதற்கென்று தனியாகப் பதில் எழுதவில்லையென்பதை விஜ்ஞாபித்துக்கொண்டேன். M. O. L. ஸ்வாமி சிரோமணி ஸ்வாமி பிரசுரங்கள் அவச்யகர்த்தவ்ய நைமித்திக க்ஷௌரத்தை நிஷேதிப்பதில் அனேகமாக ஒத்திருப்பதால் அவைகளுக்கு ஒரே பதிலே அமையும் என்று நினைத்து இதை எழுதுகிறேன். ஆஸ்திகர்கள் நிஷ்பக்ஷபாதமாகப் படித்து உண்மையை அறியவேண்டும் என்றும் பிரதிவாதிகளும் தங்கள் அபிநிவேசத்தை விட்டொழித்து ஸரியான அபிப்பிராயத்தை அடைந்துவிடவேண்டும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். "விசாரசிக்ஷா" என்கிற பிரசுரத்தை எழுதிய M. O. L. ஸ்வாமி தமது முதல் சுலோகத்தில் அவர் எழுதியபடி பகவான் தூங்குவதாக அவருக்குத் தோன்றிய போதிலும், தவறுகளை அறியாமையினால் செய்யும் வித்வான்களை நல்வழியில் நடத்துவதற்காக அரவணையிலிருந்து ஸ்ரீ சார்ங்கராஜன் எழுந்திருக்க யத்தனிப்பதாகவே நமது கண்ணுக்குப் புலப்படுவதால் அக்கருத்துக்கொண்ட மங்களசுலோகத்தையே நமது "ஸத்நிஷ்டாநுகம்பிகா" என்கிற கிரந்தாரம்பத்தில் நாம் எழுதினோம். சிக்ஷாகாரர் 2-வது சுலோகத்தில் தமது ஆசார்

யரை ப்ரசம்ஸித்து நமக்கும் அந்த விஷயத்தை ஞாபகப்படுத்திய தற்கு அவரிடம் நாம் மிக நன்றி பாராட்டுகிறோம்.

சிக்ஷகரும் சிரோமணியும் ஜ்யேஷ்டஞாதி மரணத்தில் கனிஷ்ட ஞாதிகளுக்கு 10-வது தினத்தில் க்ஷௌரம் செய்[illegible]ள்ளவேண்டியது அவசியம்தான் என்பதை [illegible] நிர்விவாதமாக ஒப்புக்கொண்டு அந்த க்ஷௌ[illegible] ம்பாஜனத்திற்குப் பிறகு கூடாதென்றும், ஜீவத் பித்ருக்களுக்கு வேண்டியதில்லை யென்றும் அபிப்ராயப்பட்டு அதற்கு ஆதாரமாகக் காட்டவேண்டிய ப்ரமாண வசனங்களைக்காட்டிலும் தங்கள் தேசத்து ஆசாரம்தான் ப்ரதானம் என்று சொல்லுவதுடன் இப்பொழுது இவ்வுலகிலில்லாத பல பெரியோர்களின் அனுஷ்டானம் இப்படித்தானென்கிறார்கள். பெரியோர்களின் அனுஷ்டானமும் உபதேசமும் நமக்கு உபாதேயம்தான். ஆகிலும் இப்பொழுது இருக்கிறவர்கள் அவைகளை உள்ளபடியே சொல்லுகிறார்களா? தாங்கள் செய்தற்கும் செய்வதற்கும் அனுகூலமாக இப்பொழுது மாற்றிச் சொல்லுகிறார்களா வென்பதைப்பற்றி மத்யஸ்தர்கள் ஸம்சயப்படக்கூடுமாகையால் பெரியோர்களின் அனுஷ்டான உபதேசங்கள் என்பதை மட்டும் ஸாக்ஷயமாக அங்கீகரிப்பது தகுதியற்றதாகவே முடியும். ஜீவத் பித்ருக்களின் க்ஷௌரம் இப்பொழுது நமக்கு விசாரவிஷயமல்ல. அது நேரும்போது விசாரிப்போம். ஆகிலும் காஞ்சீ மண்டலத்தில் ப்ரஸித்த ச்ரோத்ரியஸ்ரீ கிராமமாகிய கொத்திமங்கலத்திலும் வேறு பல கிராமங்களிலும் ஜீவத்பித்ருகர்கள் ஆசௌச விஷயத்தில் 10-வது தினத்தில் க்ஷௌரம் செய்துகொள்ளுகிற வழக்கமுண்டென்பது நமக்கு நன்றாய் தெரியும், ஆகவே காஞ்சீ மண்டலத்திலுள்ள ஸர்வ அக்கிரஹாரங்களிலும் ஜீவத்பித்ருக்கள் ஆசௌச க்ஷௌரம் செய்துகொள்வதில்லை என்று சிக்ஷையில் எழுதியிருப்பது நம்பத்தக்கதில்லை. போஜனானந்தரகாலத்தில் தெரிந்த ஆசௌச விஷயத்தில் கனிஷ்ட ஞாதிகள் க்ஷௌரம் செய்துகொண்டுதான் தர்ப்பணம் செய்வது காஞ்சீ மண்டலத்தில் உள்ள இவர்களின் வாஸஸ்தானமா

கிய நாவல்பாக்கம் ஸ்ரீகிராமத்தில் இப்பொழுது எழுந்தருளியிருக்கும் பெரியவராகிய ஸ்ரீ உப. வே. ஆராவமுதாச்சாரியர் ஸ்வாமியினுடையவும் மற்றும் பல பெரியோர்களுடையவும் ஆசாரம் என்பதை இவர்கள் அறிந்திருந்தும் இப்பொழுது அதை மறைத்துப் பேசுகிறார்கள்.

மேலும் இளநகர் ஸ்ரீ உப. வே. கெட்டம் ஸ்வாமியை அடியேன் நேரில் ஒப்பிலியப்பன் ஸந்நிதியில் விசாரித்ததில் தாமே அப்படி அனுஷ்டித்திருப்பதாகவும் ஸாதித்திருக்கிறார். அடியேனுடன் ஸ்ரீ உ. வெ. வா. ரா. ஸ்ரீநிவாஸதாதாசாரியரும் அப்பொழுது கூடவேயிருந்தார். புரிசை தையார் முதலிய அனேக ஊர்களிலும் போஜனானந்தரம் தெரிந்த ஆசௌச விஷயத்தில் 10_வது நாளில் அன்றையதினமே க்ஷௌரம் செய்துகொள்ளுகிற வழக்கமுண்டென்பதாக அனேக கடிதங்கள் நமக்குத் தெரிந்தவர்களுக்கு வந்திருக்கின்றன. ஆகையால் தங்கள் தேசத்தில் போஜனானந்தரம் க்ஷௌரம் செய்துகொள்ளும் வழக்கம் கிடையாதென்று இவர்கள் சொல்லுவதும் எழுதுவதும் ப்ராமாணிகம் அல்லவென்றும் இப்பொழுது புதிதாகக் கல்பிக்கிறார்களென்றும் நாம் நிச்சயமாகச் சொல்லவேண்டியிருக்கிறது. க்ஷௌரம் செய்துகொள்ளாமல் மறுநாள் தீட்டுக் கழிந்துவிடும் என்றும் தர்ப்பணம் மட்டும் செய்தால் போதும் என்றும் சொல்லுவது துராசாரமே யன்றி ஸதாசாரமல்ல வென்பதையும் ஆஸ்திகர்கள் நன்குணரவேண்டும். வலயபேட்டை ஸ்ரீ ஸ்வாமியின் ஞாதிகளும் ஸ்ரீ ஆராவமுதன் ஸந்நிதி மரியாதைக்காரர்களுமாகிய பாட்டாச்சாரியர் எல்லோர்களுடைய அனுஷ்டானமும் நாளதுவரையில் போஜனானந்தரம் தெரிந்த ஆசௌச விஷயத்தில் அன்று க்ஷௌரம் செய்துகொள்ளும் ஸதாசாரமே இருந்துவந்திருப்பதாக நாமும் இன்னும் அனேகரும் தெரிந்துகொண்டிருப்பதுடன் பச்சைக்கல் ஸ்ரீ உ. வே. ஸ்ரீநிவாஸராகவ பாட்டாச்சாரியரும் அனேகரிடம் இப்பொழுதும் சொல்லியிருக்கிறார். ஸ்ரீ உப. வே. சின்னமு ரகுநாதபாட்டாச்சாரியர் ஸ்வாமி நம்மிடமும் இன்னு

மனைகரிடமும் பலதடவை சொல்லியிருக்கிறார். பாட்டாச்சாரியர் தெரு ஸ்ரீ உப. வே. ரா. ஸ்ரீ. தாதாசார் ஸ்வாமியே அடியேனிடம் நமது அச்சாபீஸ் வாசலில் காவேரியில் ஸ்நானம் செய்துவிட்டு ஈரத்துணியுடன் எழுந்தருளியிருக்கையில் மடம் ஸ்ரீ உ. வே. ஸ்ரீநிவாஸாச்சாரியர் முன்னிலையில் பின் வருமாறு ஸாதித்தார். அதாவது——அந்த ஸ்வாமி வடதேசமன்றோ தங்கள் ஊரில் அப்படித்தான் என்று ஸாதிக்கிறார் என்று. இந்த வார்த்தையை இல்லையென்று ஸ்ரீ தாதாசார் ஸ்வாமி மறுதளித்துவிட்டால் தேசாசாரம் என்பதை நழுவவிட்டு சாஸ்த்ர விசாரத்தை மட்டும் நடத்துவதில் யாதொரு ஆக்ஷேபணையும் அடியேனுக்கில்லை. சாஸ்த்திரவிசாரத்தின் முடிவை அங்கீகரித்து என் அபிப்ராயத்தை யான் மாற்றிக்கொள்வதுடன், அப்படி நேரும் ஸமயத்தில் அதின்படி நடப்பதிலும் நான் தயங்குவதில்லை. நான் சொன்னதையே ஸ்தாபிக்கவேண்டும் என்கிற பிடிவாதமும் எனக்குக் கிடையாது. ஸ்ரீ உ. வே சி. ர. ஸ்ரீனிவாஸபாட்டாசார் ஸ்வாமி ஒரு ஸமயம் நம் தெருவில் வந்து ஸ்ரீ உஹ. வே. அ. ஸ. ஸ்ரீநிவாஸதாத்தாசாரியர் ஸ்வாமி, சுந்தரராகவதாதாசரரியர் ஸ்வாமி இன்னும் பலபேர்கள் முன்னிலையில் பேசிக்கொண்டிருக்கையில் உங்கள் முன்னோர்களான ஸ்ரீ உ. வே. சதக்ரது பாட்டாசாரியர், பச்சைக்கல் ரெங்காச்சாரியர், வாஜபேயம் சடகோப பாட்டாசாரியர் இந்த ஸ்வாமிகள் மூவரும் ஒருதடவை தசமதினத்தில் போஜனத்திற்குப் பிறகும் க்ஷௌரம் செய்துகொண்டிருக்கிறார்களென்பதை ஞாபகப்படுத்தியதற்கு ஆம் ஒரு அனந்தரவார்ஸக்காக அவசியம் அப்படி செய்துகொள்ளவேண்டியிருந்ததென்று ஸாதித்தாராம். இப்பொழுதும் அதுபோல் அனந்தரவார்ஸ கிரமத்தில் ஏதாவது சொத்துக்கிடைப்பதாகயிருந்தால் ஸ்ரீஸ்வாமி வபநம் செய்துகொள்வார்போலும். என்னே இவர்களின் ஸாஹஸம்ெதெ. M. O. L. ஸ்வாமி எழுதியதில் வஹசேதனர்களுக்கு வஹவியமான அனுக்ரஹங்களைப் பண்ணிக்கொண்டு வலயபேட்டையில் எழுந்தருளியிருக்கும் நாவல்பாக்கம் ஸ்ரீ ஸ்வாமி ஸந்நிதியிலும் நடந்த ஹொஜநாநஹ

ஜ்யேஷ்டஜ்ஞாதிச்ரேஷ்டேப்யஸ்ஸுஹ்ருத்ப்ய: லக்ஷணாநுஷ்டா
நாஹாவ ரூபமான விலக்ஷணுநுஷ்டானத்தைக் குறிப்பிட்டுவிட்டு
அந்த விஷயத்தில் சிலர் ஆசங்கைப்பட்டார்களென்றும் கிரம
மான வழியில் அந்த ஆசங்கைக்குப் பரிஹாரம் பண்ணிக்கொள்ள
வில்லை யென்றும் குறிப்பிட்டிருக்கிருர். ஸஹாசேதனர்களு
க்கு ஸஹாவியாநுக்ராஹகரென்று சிலரைச் சொல்லிவிட்டதி
ஞல் அப்படியல்லாமல் ஏதோ சில ஸாத்விக பரிகணிதவ்யக்தி
களுக்குமட்டும் விசேஷாநுக்ரஹம் செய்யும் மஹத்தரர்களுக்கு
யாது குறைவு வந்துவிடும். எல்லோராலும் அபேக்ஷிக்கப்படு
வது ஸதாசார்யாநுக்ரஹமே. இவ்வளவு பேர்களுக்கு ஆசார்
யனுக விருந்தால்தான் மோக்ஷத்தை யடையலாம் என்று ஒரு
கிரந்தத்திலும் சொல்லப்பட்டிருக்கமாட்டாது. அனேகர்களு
க்கு ஆசார்யனுகவேண்டுமென்று பேரவாக்கொண்டு அதற்காகப்
பல சூழ்ச்சிகளைச் செய்வதும் செய்விப்பதும் மோக்ஷவிரோதி
யே. ஶ்ருதாந்த "ஶிஷ்யாவஸம் ஸாமராவி" என்கிறபடி
ஶ்ருதிப்ரயோஜனமும் கிட்டும். பெரியோர்கள் எழுந்தருளியிரு
ந்த ஸ்தானத்தை ஒரு வழியால் கைப்பற்றிக்கொண்டுவிட்டால்
மதாநுமதிகோணகோணகோ நலோக: வாரஸௌத்ருக: என்கிற
படி ஒரு காலவிசேஷத்தில் சிலர் சிஷ்யர்களாகிவிடுவதும் உலக
வியல்பே. அதடியாக ஐஹிக லாபங்களேயும் அடைந்து மங்கா
மே பலர் வாழ்வது முண்டு. "ஸாமர்த்யம் ஶ்ருஸம்பதயோ
ஸௌஶீல்யம் ஸௌலப்யம் ஸம்ஸ்தம்" என்கிறபடி பாக்யவானுக ஒருவன்
ஜனித்துவிட்டால் ஶ்ராதவுலகில் எதுதான் கிடைக்காமற் போய்
விடும்.

யாராவது ஒருவர் சில விலக்ஷணமான அனுஷ்டானங்களேச்
செய்தால் அதைப்பற்றி மற்றவர்கள் பேசவேண்டியது அனுவச்
யகமே. ஆனுல் லோகத்தில் ஏதாவது ஒரு விஷயத்தைப்பற்றி
ஸம்சயம் ஏற்பட்டால் "யத்யதாசரதி ச்ரேஷ்டஸ்தத்ததேவேதரோ
ஜந: । ஸ யத்ப்ரமாணம் குருதே லோகஸ்ததநுவர்த்ததே॥"
என்று ஸ்ரீ கீதையில் ஸ்ரீக்ருஷ்ணன் திருமுக மிருப்பதால் ஶிஷ்டா

ஹேஸரர்கள் என்று ப்ரஸித்தியை வஹிக்கும் பெரியோர்களின் அநுஷ்டான உபதேசங்கள் எப்படி இருக்கின்றனவென்று பிரா மாணிகர்கள் அறிய முயற்சிப்பதும் உசிதம்தான் என்பதை யாரும் ஆக்ஷேபிக்கமாட்டார்கள். அதற்காகவே பெரியோர் தாங்கள் செய்வதை சாஸ்த்ரமறிந்து நிதானித்துச் செய்யவேண்டியதுடன் ஸஹஸா எதையும் விடவும் கூடாது. ஆகையாலே யிறே நமது பரமாசார்யன் "வஹிதவ்யோ மஹத்பி: ஸதாசாரோ ஜநநாய" என்று பணித்தது. இவ்வுலகில் சிலரிடமிருந்து சில ப்ரயோஜனங்களையடையக் கருதியும் ஸங்கேதத்திற்குக் கட்டுப்பட்டும் நடக்க இஷ்டமில்லாமல் ஆமுஷ்மிக விஷயத்தில் எனது மனஸ்ஸாக்ஷியையே பெரிதாக மதித்து யதாதிகாரம் ஶாஸ்த்ர விஹித பூர்வாசாராநுஷ்டான ப்ரகாரத்தை நிஸ்ஸம்ஶயமாக ஸ்வீகரித்த அடியேன் போன்றவர்களின் செய்கையை உலகத்தார் த்ருஷ்டாந்தமாக அங்கிகரிக்கக் கொஞ்சம் தயங்கக்கூடும். ஆகவே ஶிஷ்டதயா ப்ரஸித்தராக எழுந்தருளியிருக்கும் வலயபேட்டை ஸ்ரீ ஸ்வாமியின் ப்ரகிருத விஷயாநுஷ்டானத்தைப்பற்றி இத்திருக்குடந்தையிலுள்ள அனேகப் பெரியோர்களாசங்கைப் பட்டதுண்டு. அப்படியே அடியேனும் ஆசங்கைப்பட்டதும் வாஸ்தவமே. இதையறிந்த ஸ்ரீ ஸ்வாமி பரமகிருபையினால் பாட்டாச்சாரியார் தெருவுக்கு நல்ல வெய்யிலில் எழுந்தருளி அடியேனை அனுக்ரஹித்து அடியேனுடைய ஆசங்கைகளுக்குப் பரிஹாரம் அருளிச்செய்கையில் ப்ரகிருத விஷயத்தில் தர்மசாஸ்த்ரவிஷயங்களை என்னுடைய மனதிற்கு ஸம்சயம் தீரும்படி நிரூபிக்காவிட்டாலும் இந்த க்ஷௌரவர்ஜநாசாரத்தை தான் புதிதாக அனுஷ்டிக்கவில்லையென்றும் பெரியோர்களின் ஆசாரம் இப்படித்தான் என்றும், இது விஷயத்தைப்பற்றி விசாரம் செய்வதற்காக நீ ஸபைகூட்ட உத்தேசிப்பது உசிதமல்லவென்றும் ஸ்ரீ ஸ்வாமி நியமித்ததின்பேரில் ஸபை கூட்டுவதற்காக நோடீஸ் அச்சிட உத்தேசித்ததை நிறுத்திவிட்டு, "ஸம்ருத்தி: ஸாத்விகாநாம் ஸதாம் யதீச்சை:" என்பதையும் ஸ்மரித்து நமக்கு ஆகவேண்டியதென்னவென்றும் நினைத்து ஸ்வாமியின் ஸௌஹ்ருதலக்ஷணத்தையே ப்ரா

13

ர்த்தித்து வந்துவிட்டேன். இதையறிந்தவர்களும் ஸ்ரீ ஸ்வாமியி னிடம் அபிமானிகள்போல் நடனம் செய்பவர்களுமான கலஹோ பதேசகர்களும் விஷமிகளுமான சிலர் ஸ்ரீ ஸ்வாமிக்கும் அடியே னுக்கும் நடந்த ஸம்பாஷண வ்யாகரணத்தில் ஸ்ரீஸ்வாமி நியமித் ததையும் அடியேன் விஜ்ஞாபித்ததையும் தாறுமாறாகத் தங்களிஷ் டப்படி திரித்துக் கூறத் தலைப்பட்டார்கள். அதன் பிறகுதான் திருக்குடந்தை பண்டிதஸபையார்களுடன் நாம் கலந்து இவ் விஷயத்தைப்பற்றி ஆலோசிக்கவும் தீர்மானம் செய்யவும் அந்த தீர்மானத்தை பண்டித சபையின் சார்பாக அச்சிட்டு வெளிப்படு த்தவேண்டிய ஆவச்யகதையும் நேர்ந்தது. இவ்வளவுவரைக் கும் இவ்விஷயத்தில் என்னை ப்ரவேசிக்கும்படி கலஹோபதேச கர்களின் செய்கையே தூண்டியது என்பதை ஸ்ரீ ஸ்வாமியுள்பட யாவரும் அறிவார்களாக. இதைத்தான் M. O. L. ஸ்வாமி கிர மத்தப்பான வழியென்றுரைக்கிறார். கிரமமான வழி எது என் பதை அவர் காட்டினால் அதில் செல்கிறோம்.

M. O. L. ஸ்வாமி எழுதியதில் "திருக்குடந்தையில் பண் டித ஸபை என்று வாஸ்தவமான ஒரு ஸபை யிருந்தால்" என்று ஸம்சயப்படுகிறார். அதற்குப் பதிலாக நாம் ஸ்மரிப்பது "[Grantha text illegible] । [Grantha text illegible] ॥" என்பதே. இவர் தர்ம சாஸ்த்ரபரிசயம் செய்யாமலோ ஒருக்கால் ஏதாவது இரண்டொரு புஸ்தகங்களைப் பார்த்தும் அபிநிவேசத்தினால் அதையும் உள்ள படி உணராமல் ப்ரமித்தோ விசாரசிக்ஷை என்கிற பெயருடன் ஒரு பிரகாரத்தை வெளியிட்டதுபோல் நமது பண்டித ஸபாநிர் ணயத்தையும் நினைத்துவிட்டார்போலும். திருக்குடந்தையில் பண்டிதர் உண்டோ. இல்லையோவென்கிற ஸம்சயம் "செழுமா மணிகள் சேரும் திருக்குடந்தை" என்கிற ஆழ்வார் அருளிச்செய லைக் காதாலும் கேட்டிராதவர்களுக்கே உண்டாகும். திருக்குட ந்தை நகர் முக்காலத்திலும் ஸகலவித வித்வான்களையும் தனக்கு அணிகலனாகக் கொண்டதென்பதை யாவரு மிவரு முணரட்டும்.

M. O. L. அவர்கள் தமது விசாரசிகைஷயில் விஷயத்தை மட்டும் எழுதியிருப்பாரேயானல் உண்மையை ப்ராஜ்ஞர்களான ப்ராமாணிகர்கள் நன்கு அறிவார்கள். நாம் மறுபடியும் இந்த ப்ராகாசிகையை வெளியிடவேண்டிய ஆவச்யகமே யிராது. நாம் நமது முன் பிரசுரத்தில் விஷயத்தைமட்டும் எழுதினேமேயன்றி ஒருவரையும் இழிவாகப் பேசவில்லை யென்பதையும் பரிஹாஸோக்திகளையோ க்ஷேபோக்திகளையோ நாம் உபயோகிக்கவில்லை யென்பதையும் யாவருமறிந்திருக்கலாம். அப்படியிருக்க இந்த ப்ரொபஸர் தாம் திருவாதி ஸம்ஸ்கிருத கலாசாலையில் ஸ்தானம் வஹிப்பதையே பெரிதாக வெண்ணி அஃதில்லாதவர்களைத் தாழ்வாக நினைத்துத் தமது பிரசுரம் 2-வது பக்கம் முன் பகுதியில் தமக்குத் தோன்றியதையெல்லாம் எழுதியிருக்கிறார். அதைக் குறித்துப் பதில் ஒன்றுக்கு ஒன்பதினுயிரமாக நமக்கும் எழுத முடியும். அவைகளை அச்சிடுவதற்குமட்டும் ஆயிரக்கணக்கில் கூலியாகிவிடும். ஆகையால் அவரடைந்திருக்கும் பெருமையைக் குறித்து இந்த "வாணிதூ் கெவலம் நஸ்யாகஃ ஷாநவி தாவிகாரணஜ்। ஹாமெ்யெநவஹிஃஹ்யனெ யநஷாநாடியொ நூஃ ॥" என்கிற ஶ்லோகத்தையே பதிலாக வுரைக்கிறோம்.

இவர் தமக்கு ஏதோ சில விஷயங்களில் பூர்ணபரிசயமிருப்பதாக நினைத்து சில புஸ்தகங்களின் விஷயஸூசிகைகளைப் பார்த்துவிட்டோ திருவாதி கலாசாலையில் உள்ள புத்திசாலிகளான உபாத்தியாயர்களின் பழக்கத்தினலோ உத்யான பத்திரிகைகளில் வெளியாயிருக்கும் அபிக்ஞர்களின் லேகனங்களைக்கொண்டோ ஸாமான்யசாஸ்த்ரம், விசேஷசாஸ்த்ரம், விதிநிஷேதம், ஸ்மிருதி வசனம், நிபந்தகாரவாக்யம் என்றிப்படியாக சில சப்தங்களை மட்டிலும் கூறுகிறார். அவைகளின் உபயோகத்தையும் லக்ஷணங்களையும் தன் புஸ்தகத்தில் ஒரு யிடத்திலாவது காண்பிக்கவில்லை. M. O. L. என்ற பெரிய டைடல் பெற்ற இவர் நமது சிறு பிரசுரத்திற்குப் பதில் எழுத முன்வந்ததைக் கண்டு நாம் ரொம்பவும் ஸந்தோஷப்பட்டதுடன் இவர் வெளியிடும் பிரசுரத்தின் வாயி

லாக அனேக அபூர்வ விஷயங்களையாவது நாம் தெரிந்துகொள்ளலாமென்று நினைத்துக் கடைசியில் ஏமாற்றத்தையே அடைந்தோம். இவர் எழுதப்புகுந்த விஷயத்தை யாராவது ஒரு வித்தியார்த்தி எழுதியிருந்தாலும் மிக நன்றாய் விஷயங்களை நிரூபணம் செய்திருக்கக்கூடும் என்றே நாம் நினைக்கிறோம். தவிற இவர் பிரசுரம் ஸாரமற்றதாக விருப்பதற்கு வேறு காரணமு முண்டு. அதாவது மிக நாவன்மை படைத்த ஒரு பெரிய வக்கீலிடம் ஒரு கேஸைக் கொடுத்து கோர்ட்டிலாஜராகி வாதிக்கும்படி கேட்டுக்கொள்ளுகையில் ஷை கேஸில் சட்டரீதியான ஆனுகூல்யமாவது தஸ்தாவேஜிகளின் உபகாரமாவது இல்லாவிட்டால் அந்த வக்கீல் எவ்வளவு கெட்டிக்காரராகவிருந்தபோதிலும் எதிர்கக்ஷியை ஸாமான்ய வக்கிலே நடத்தி ஜட்ஜுகளுக்கு உண்மையைத் தெரிவித்துவிடலாம். அதுபோல் இவர் தம்மை மிக ஸமர்த்தராகவும் நம்மை அக்ஞராகவும் நினைத்துக்கொண்டுவிட்டாலும், பிரகிருத க்ஷௌர விஷயத்தில் அவசியம் செய்துகொள்ளவேண்டு மென்பதற்கே சாஸ்த்ரங்கள் அதிக ஒற்றுமையாயிருப்பதால் இவருடையவும் சிரோமணியினுடையவும் பிரசுரங்களில் செய்திருக்கும் நிரூபணங்கள் ஊற்றுக்கு நிற்கவில்லை யென்பதையும் வீண் வாக்ஜாலம் என்பதையும் ஜட்ஜ் ஸ்தானீயர்களான ப்ராமாணிக மத்யஸ்தர்கள் நன்கு தெரிந்துகொண்டிருப்பதால் நமது கக்ஷியை அதிக ச்ரமமின்றியே நிரூபிக்கும்படியான ஸௌகரியம் நமக்குக் கிடைத்துவிட்டது. ஆதலாலும் நாம் அதிகம் எழுதவேண்டியதில்லை.

தவிறவும் இவர் தமது ஆசாரியர் செய்த க்ஷௌர பரித்யாகத்தைப்பற்றி இதரர்கள் எப்படிப் பேசலாம் என்கிற அபிநிவேசத்தினாலேயே நமது தர்மசாஸ்த்ரநிர்ணயம் என்கிற பிரசுரத்திற்குப் பதில் எதையாவது எழுதித் தள்ளிவிடவேண்டுமென்று எழுத ஆரம்பித்ததினால் ,,ஸுவிநிவெஶவஶீக்ரு தவெதஸாம் வஹாவிஷாவெவி ஸம்ஹவதி ஹ்ரஃ'' என்கிற ஸ்ரீ யாமுநமுநீந்த்ரரின் ஸ்ரீஸூக்திப்படி ரொம்பவும் ப்ரமத்தை யடைந்துவிட்டார் என்பதை அபிமிதஜ்ஞர்களும் அமிதஜ்ஞர்களும் அறிவர்கள்.

சிரோமணியும் பிரமித்ததில் இவருக்குச் சளைத்தவரன்று. ஆகையால் ஹோஸூர் பிதற்றலுக்கு நாம் மறுபடி பதில் எழுத ஆரம்பிப்பது அத்யநாவஶ்யகமே. ஆகிலும் துஷ்யதுதுர்ஜநந்யாயத்தை யனுஸரித்தும் பாமரர்களுக்கும் ப்ராமாணிகர்களுக்கும் வாஸ்த்தவத்தைத் தெரியப்படுத்துவதற்காகவும் விசாரசிக்ஷையிலும் தத்வநிர்ணயத்திலும் சொல்லியவைகளை வரிசையாகக் கண்டித்து உண்மையை விளக்குகிறோம்.

---

(1) 'க்ஷௌரகர்மவிவர்ஜிதகர்த்ருகக்ரியாயா:' என்கிற நிபந்தகாரவாக்யம் "கேஶாநாவப்ய ததஸ்ஸ்நாத்வா தத்யுரேவோதகாஞ்ஜலீந்" என்கிற போதாயன வசனத்தையும் "தத்யுர்ஜ்ஞாதயஸ்ஸர்வே க்ஷௌரம் க்ருத்வா திலோதகம்" என்கிற ஜைஷ்யஹார வசனத்தையும் "வபநம் க்ருத்வா ஸ்நாத்வா ஸைகவஸ்த்ரா ஜலாஞ்ஜலீந் தத்யு:" என்கிற ப்ரசேதஸ் வாக்யத்தையும் அனுசரித்தே நிபந்தகாரரால் சொல்லப்பட்டிருப்பதால் அது நமக்கு க்ராஹ்யமேயன்றி த்யாஜ்யமன்று. மேலும் "அஸபிண்டாநே ஸ க்ருதைவ ஸவபநம் க்ஷௌர ஸ்நாத்வா தஶாஹேவா க்ருத்வா உதகம் தத்யு:, ஸந்தோ க்ஷௌரம் க்ருத்வைவ உதகம் தேயம்" என்று தோழப்பர் சொல்லியிருப்பதாலும் தர்ப்பணத்திற்கு க்ஷௌரம் பூர்வாங்கமென்றே சாஸ்த்ரஜ்ஞர்களின் கொள்கை. ப்ரேத தர்ப்பணவிஷயத்தில், ஸ்நானம், ஏகவஸ்த்ரதாரணம், ப்ராசீனவீதம் இவைகள் எப்படி மிக முக்கியமோ அப்படியே கனிஷ்ட ஜ்ஞாதிகளுக்கு ஏகோத்திஷ்டம் வரைக்கும் க்ஷௌரம் செய்து கொண்டேதான் தர்ப்பணம் செய்யவேண்டும் என்பதும் விடத்தகாதது என்பதை நன்றாய் மனதில் வைக்கவேண்டும்.

'தத்யுர்ஜ்ஞாதயஸ்ஸர்வே க்ஷௌரம் க்ருத்வா திலோதகம்' என்கிற வசனத்தினல் ஜ்ஞாதிகளெல்லோரும் க்ஷௌரம் செய்து கொண்டு தர்ப்பணம் செய்யவேண்டும் என்று ஏற்பட்டபோதிலும் ஜ்ஞாதயஸ்ஸர்வே தர்ப்பாக்நிஷ்டா தஶமேஹநி । வாபயேயு

ஶ்ருதேஸ்வேஷு கநிஷ்டாநாம் ஸஹஸைவ து வா ॥ என்கிற விசேஷ வசன பலத்தினுல் கனிஷ்ட ஞாதிகளுக்குத்தான் க்ஷௌரம் ஏற்படுகிறது. ஷை கனிஷ்ட ஞாதிகளும் ஜீவத்பித்ருக்களாகவிருந்தால் மேல் சொல்லிய வசனத்தினுல் க்ஷௌரம் செய்துகொள்வதில் ஆக்ஷேபம் ஒன்றுமில்லை என்பதும், ந ஜீவத்பித்ருக: கு ர்யாத்தைௌ: க்ருஷ்ணஸ்ய தர்பணம், என்கிற வசனத்தினுல் ஜீவத் பித்ருக்கள் தர்ப்பணம் செய்யவேண்டியதில்லை யென்றும் தர்மசாஸ்த்ரம் கட்டளையிடுகிறது.

கர்ப்பதீக்ஷை முதலிய தீக்ஷையையுடையவர்களின் க்ஷௌர விஷயமான விதி நிஷேதங்களுக்குத் தனித்தனி வசனங்களினுல் ஆங்காங்கு விதிவிலக்குகள் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருப்பதால் அவ்வசனங்களை இப்பொழுது இங்குறைக்கவேண்டிய அவசியமில்லை. அவைகளையும் எழுதினுல் புஸ்தகம் பெரிதாகிவிடும்.

போஜனனந்தரம் நேர்ந்த மரணவிஷயத்திலும் 10-வது நாளில் போஜனனந்தரம் தெரிந்த மரணவிஷயத்திலும் கர்த்தாவுக்கோ ஞாதிகளுக்கோ க்ஷௌரம் தர்ப்பணம் செய்யவேண்டிய ப்ரஸக்தி ஏற்பட்டால் மரணமும் ஆசௌசமும் தெரிவதற்குமுன் கர்த்தாவும் ஞாதிகளும் போஜனம் செய்திருந்தபோதிலும் வைதமான அந்த க்ஷௌரத்தை போஜனோத்தரகாலத்திலும் அவசியம் செய்துகொண்டுதானுகவேண்டும். மரணமும் ஆசௌசமும் தெரிந்தபிறகு போஜனம் செய்து அதே தினத்தில் ஐச்சிக நைமித்திக வைத க்ஷௌரங்களுள் ஒன்றையுமே செய்துகொள்ளக்கூடாதென்கிற வெகு ஸாமான்ய விஷயத்தைக்கூட நமது நண்பர்களாகிய M. O. L. அவர்களுக்கும் சிரோமணிகளுக்கும் ஸமர்த்ரா நாம் எடுத்துறைக்கவேண்டிய கடமையை நம் தலையில் பகவான் சுமத்திவிட்டதற்கு நாம் மிக வருத்தப்படுகிறோம். நஸ்நாதஸ்தாந க்ஷௌர தர்பணேஷு நிஷித்தா நாடீ ஶ்ராத்தயாத்ரா ஸமோந்நதாகா நாடி । க்ஷௌரம் விதேயம் ஹ்யஸி ஸாந்த்யயோஶ்ச ஜிஜீவிஷுணாம் நவமே நவாஹ்நி ॥ என்கிற ஸ்ரீபதி வசனத்தை யனுஸரித்து ஸார்வபௌமர் ஸாங்கஸ்ய வபநநிஷேத: என்று சொல்லியிருப்பதைப் பார்த்து மயங்கின இவர்கள் ப்ரகிருத க்ஷௌர விஷ

யத்தில் கொண்டிருக்கு மபிப்பிராயத்தை யறிந்த நமக்குச் சிரிப்புவருகிறது. ப்ராமாணிகர்களான மற்றை பண்டிதர்களும் என்னே இவர்களின் வைதுஷ்யமும் அபிநிவேசமுமென்று சிரிக்கிறார்கள். இந்த பூமண்டலம் முழுவதுமுள்ள தர்மசாஸ்த்ர புஸ்த்தகங்களில் எவ்வளவு காலம் தேடிப்பார்த்தாலும் ஆசௌசம் தெரிவதற்கு முன் செய்த போஜனமானது பிறகு உண்டாகிற அல்லது தெரிகிற நிமித்தத்தினால் செய்துகொள்ளவேண்டியதாக ஏற்படுகிற நைமித்திக க்ஷௌரத்தைத் தடுக்கக்கூடியதென்கிறதற்கு ப்ரமாணலேசமும் இவர்களுக்ககப்படாதென்பது திண்ணம்.

நிராக்ஷேபமாக எல்லோரும் ஒப்புக்கொள்ளும்படியான போஜனானந்தர நைமித்திகக்ஷௌர நிஷேதவசனத்தை இவர்கள் காட்டிவிட்டால் என்னைப்பற்றியவரையில் அவ்வசனத்தை யான் ஒப்புக்கொள்ளத் தடையில்லை. சௌளம், உபநயநம் முதலிய சுபகர்மங்களிலும் வைதபோஜனத்தைச்செய்து பிறகு வைத க்ஷௌரம் செய்துகொள்ளும் வழக்கம் நமது நண்பர்களுக்கும் தெரிந்தும் நேர்ந்துமிருக்கலாமென்று நினைக்கிறோம்.

ராகப்ராப்த போஜனமும் வைதபோஜனமும் ராகப்ராப்த க்ஷௌரம் ஒன்றையே நிஷேதிக்குமே யல்லது வைதக்ஷௌரத்தை ஒரு ஸமயத்திலும் நிஷேதிக்கமாட்டாது என்பதை யாவருமறிந்திருக்கலாம் என்றே மீண்டும் சொல்லுகிறோம். ஸ்நாத புக்த என்கிற ச்லோகத்தில் படிக்கப்பட்ட புக்த என்கிற சப்தம் ஐச்சிக க்ஷௌரம் ஒன்றைத்தவிர நைமித்திக வைதக்ஷௌரங்களையும் நிஷேதிக்கும் என்று ஒப்புக்கொண்டால் அந்த சுலோகத்தில் புக்த என்பதுடன் சேர்த்துப் படிக்கப்பட்ட, ஸ்நாத, ஹ்ருஷ்ட, உத்கட, புபுக்ஷித, யாத்ராதுர, ரோகாதுர முதலிய சப்தங்களும் வைதக்ஷௌரத்தை நிஷேதிக்கச் சக்தியுள்ளவைகளாகிவிடும். அப்படியாகில் ஸ்நானம் செய்தபிறகும் எண்ணெய்தேய்த்து ஸ்நானம் செய்தபிறகும் வெளியூருக்குப் புறப்படவிருக்கும் ஸமயத்திலும் மற்றும் அந்த ச்லோகத்தில் சொல்லியிருக்கும் காரணங்களுள் ஏதாவது ஒன்று ஏற்படும்பொழுதும்

நவமியிலும் கூட ஆசௌசக்ஷௌரத்தை விடவேண்டியதாக ஏற்பட்டுவிடும். அப்படிப்பட்ட க்ஷௌரத்யாகத்தை இவர்களும் நாமும் ஒருபொழுதும் ஒப்புக்கொண்டதில்லை யென்பதை யாவரு முணர்வர்கள்.

(2) 'ஸூக்ஷ்மா வசநம் ஶிஷ்ட: ப்ரத்யக்ஷம் ப்ரவர்த்தகே' என்கிற வசனத்தை இவர்கள் கர்த்ருபரமாகச் சொல்வது மிகவும் அஜ்ஞக்ருத்யம். ஷை வசனம் ஜ்ஞாதிகளின் வபநப்ரகரணத்தி லும் தசாஹ மத்தியில் தர்சாதிகள் வந்தால் உதகதாநாதிகளை அபகர்ஷம் செய்து முடிக்கும் சமயத்தில் ஞாதிகள் செய்துகொள்ளவேண்டிய க்ஷௌரத்தை விதிக்கும் ப்ரகரணத்திலும் தீக்ஷிதரால் ச்ரார்த்தகாண்டத்தில் படிக்கப்பட்டிருப்பதையும் இவர்கள் கவனிக்கவில்லைபோலும். நமது முன்பிரசுரத்தில் வெளியிடப்பட்ட 3, 4, 5-வது வசனங்கள் உத்ஸர்க்க வசனங்களென்றும் அபவாதமில்லாதவிடத்தில்தான் பிரவ்ருத்திக்கும் என்றும் ஒரு வரியை எழுதிய சிரோமணிஸ்வாமி தன் கக்ஷிக்கு மிகுந்த ஸாதகம் ஏற்பட்டுவிட்டதாக மனப்பால் குடித்துவிட்டு நம் ப்ரயாஸம் வ்யர்த்தம் என்கிறார். ஷை வசனங்களுக்கு அபவாத வசனங்களை அவர் எழுதியிருந்தால் மிகவும் நன்றி அறிவிப்போம். M. O. L. ஸ்வாமியோ 3, 4-வது வசனங்களைப்பற்றி யாதொன்றும் பேசாமல் மேலே சென்று 5-வது வசனத்தை தீக்ஷிதருடைய ஸ்வவாக்யம் என்று சொல்லிவிட்டு அதுவும் நிஷேதவிஷயமான போஜனானந்தர கால க்ஷௌரத்தில் புகுராதென்று சொல்லிவிட்டுத் தானாகவே ஜயபேரி அடித்துக்கொண்டார். இவர் ஜயமே ஜயம். நமக்கு ஜயாபேக்ஷை கிடையாது. ஆசௌச விஷயமாகையால் சாஸ்த்ராபிப்பிராயம் ஏது என்பதைத் தெரிந்து கொள்வதிலேயே நமக்கு நோக்கம். ஏனென்றால் "வாதேந ப்ராஹ்மணம் ஜிஹ்வா ஹ்ருஷீகேஶ யோஜித: । ஶ்ரீமாநேஷ ஜாயதேத்யக்ஷ: ஸம்ஸ்ருஷ்ட்ராதிஸேவித: ॥" என்பது நமது மனதில் ஸதாவாயுக்யவெயினால் ஸ்மரணத்திற்கு வந்துகொண்டே யிருக்கிறது, நம் பிரசுரத்தில் காட்டிய மற்றை வசனங்

களையும் ஸாமான்ய வசனங்களென்று சொல்லிவிட்டுத் தப்பித்துக் கொள்ளப் பார்க்கு மிவர்கள் ஒன்றிற்கும் அபவாத வசனம் காட்டுவதே கிடையாது. இருந்தாலன்றோ காட்டமுடியும். தங்கள் மூளையை மிகவும் ஆதாரமற்றதும் துர்பலமுமான கக்ஷியில் செலுத்தி ரொம்பவும் கஷ்டத்துடன் மிக அஸம்பத்தமாக எழுதித் தங்கள் புஸ்தகத்தை மஹா ஸ்ரீகோசமாகச் செய்துவிடலாமென்று பகற்கனவு காண்கின்றார்கள்.

“யெஷா- ஜ்ஞாதிபிஃ ஸூயமோஹாதிஷ- நவஹேிநவய- ஜேஷ- குமவஸ்யாதிநா வவநம் நகூதம் யெதஷ-மாஹெ வவூாஜவவநம் கதவ்யம்,” என்ற தீக்ஷிதவாக்யத்தைப்பற்றி சிரோமணி ஸ்வாமி ஒன்றும் சொல்லவில்லை. மற்றவரோ இதுவும் நிபந்தகார வாக்யமே யென்று தமது அபூர்வமான புத்தி வன்மையினால் கண்டுபிடித்துவிட்டதாகச் சொல்லிவிட்டார். ரொம்பவும் கஷ்டப்பட்டுத் தாம் கண்டுபிடித்த விஷயத்தை உலகிற்கு வெளியிட்ட இந்தப் பெரிய ப்ரொபஸருக்குத் தகுந்த ஸன்மானம் செய்யும்படி ஆஸ்திகர்களைப் பிரார்த்திக்கிறோம். இவர்கள் வைத க்ஷௌரத்தை பரித்யாகம் செய்ததற்கு ஸூவஹஸூணமாகச் சொல்லுகிற “ஹா-கதுவஸ்யவவநநிஷெயாக” என்பது நிபந்தகாரரான தோழப்பர் வாக்யமே என்பதை மறந்துவிட்டார்கள் போலும். தீக்ஷிதர் வாக்யமும் ப்ரதமதினத்தி கர்த்தவ்யமான க்ஷௌரத்தைப் பேசவந்ததென்கிறார் ப்ரொபஸர். நாமும் அதை ஒப்புக்கொண்டுதான் 10-வது தினத்தில் அந்த க்ஷௌரத்தை அவசியம் செய்துகொண்டே கனிஷ்ட ஞாதி தர்ப்பணம் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

இக்காலத்தில் எல்லா தேசத்திலும் ஸௌகரியத்திற்காகவோ சோம்பலினாலோ தர்ப்பணாங்கமான கண்டாதுபரி க்ஷௌரத்தையும் ஊத்யர்த்தமான கழுத்துக்குக் கீழ்ப்பட்ட க்ஷௌரத்தையும் ஞாதிகள் 10-வது தினத்தில் (ஸகூஷெவ) ஒரேதரியாகச் செய்துகொண்டு பிறகு தர்ப்பணம் செய்யும் வழக்கம் லோகத்தில் பரவிவிட்டது. முக்கிய கல்பம் என்னவெனில் ப்ரதமதி

னத்தில் கர்த்தாவைப்போலவே கனிஷ்ட ஜ்ஞாதிகளும் கண்டாது பரி க்ஷௌரம் செய்துகொண்டு வாஸோதக திலோதக தானங்கள் செய்யவேண்டும். தசமதினத்திலாவது கர்த்தாவுடன் கூடவே யிருந்து பாஷாணஸ்தாபனம் செய்த நதிதீராதிகளில் தர்ப்பணம் செய்யும் கனிஷ்ட ஜ்ஞாதிகள் உதகதானத்திற்கு முன் உபரி க்ஷௌரத்தையும் பாஷாணோத்தாபனத்திற்குப் பிறகு கர்த்தாவுடன் சேஷவபநத்தையும் செய்துகொள்ளவேண்டுமென்பதே. கர்த்தாவுடன் சேர்ந்து இராத கனிஷ்ட ஜ்ஞாதிகள் தசமதினத்தில் உபரி க்ஷௌரம் மற்றை க்ஷௌரம் எல்லாவற்றையும் தர்ப்பணத்திற்கு முன்னுடியே செய்துகொள்வது வழக்கமாக ஏற்பட்டிருக்கிறது.

இவ்விஷயங்களை யெல்லாம் சாஸ்த்திரத்தின் வாயிலாகத் தெரிந்துகொள்ள இவர்களுக்கு ஸௌகரியமில்லாவிட்டால் சிஷ்டரை அண்டி தர்மசாஸ்த்ர விஷயங்களைத் தமது புத்திசக்திக்குத் தக்கபடி அறிந்துகொண்டு பிறகு விசாரசிக்ஷையாகிய மஹா ஸ்ரீ கோசத்தை யியற்ற முயற்சி செய்திருப்பாரேயானுல் வெகு நன்றுயிருந்திருக்கும். அல்லது விசாரசிக்ஷை எழுதவேண்டிய எண்ணமே உண்டாகாமல் வைதக்ஷௌர பரித்யாக ப்ராயச்சித்த கிரந்தம் எழுத ஆரம்பம் செய்திருப்பர் என்றே நாம் நினைக்கிறோம்.

கெஶாமெநாவ்ர தத꞉ ஸ்நாத்வா, க்ஷௌரம் க்ருத்வா, இவைகளெல்லாம் பூர்வ க்ஷௌரவிஷயமே யென்றும், த்வாவ்ர த்யம் ஸம்ஹாரம்ஙிஹாவவாரம் அன்றென்றும் ப்ரொபஸர் ஆஜ்ஞையிடுகிறுரேயன்றி அதற்குள்ள காரணங்களை தெளியச் சொல்லவில்லை.

இந்த ஸமயத்தில் தமது ஆவாயுவாரணாவஜ்ரஜொஷிஷெகம் செய்துகொண்டதினுல் அந்த ரஜஸ்ஸே இவர் கண்களிலும் மனதிலும் புகுந்துகொண்டு ஒன்றும தெரியாமலும் தோன்றுமலும் செய்துவிட்டதுபோலும்.

நாம் எடுத்துக்காட்டிய வசனங்களை யெல்லாம் தமக்கு பூர்ணமாகயிருப்பதாக அவர்கள் நினைத்திருக்கும் வைதுஷ்யத்தின் செருக்கினால் உதறித் தள்ளிவிட்டும் ககநு்யாவாக நயநம் செய்துவிட்டதாகவும் துஸ்வப்நம் கண்டு விழித்துக்கொண்டு ‘‘ஹாகுஸு்வவநநிஷெயாக’’ என்கிற ஒரு வாக்யத்தையே பலதடவை திருப்பித்திருப்பிப் பாடுவதுடன் ஹாக்ஷாரவிவாவயெக என்கிற ஸம்ஸ்ருதிவளவிதிவாக்யம் வேண்டுமென்று தாளமும் போடுகிறார்கள். ஹாக்ஷாரவிதவடியெக என்கிற விதிவாக்யம் உண்டாவென்றிவர்களை நாம் கேழ்க்கிறோம். ‘‘ஹாகுஸு்வவநநிஷெயாக’’ என்பதுபோல் ‘‘ஹாகுஸு் தவடிணநிஷெயாக’’ என்கிற நிஷேதமில்லையே யென்பார்களாகில், போஜனம் செய்வதற்கு முன் க்ஷௌரத்தைமட்டும் செய்துகொண்டு பிறகு புஜித்துவிட்டு ஸௌகரியப்படி ஸாயங்காலத்திற்குள் தர்ப்பணம் செய்வதாக ஒரு விதண்டாவாதி பதில் சொன்னால் அவனை இந்த மேதாவிகள் எப்படித் தடுப்பார்கள் என்பதை நாம் அறிய விரும்புகின்றோம். தவிரவும் ‘‘ஞுவெ் ஹாகெகஜீணெடி வநெவஹாக்ஷா வகிம் வந। கஉடிகாயடிாஸரொாநித்ு்ம் ஸூதகெ ஶுதகெதயா’’ என்கிற வசனப்படி ஸூதகத்திலும் சாவத்திலும் புஜித்தபிறகும் புஜித்தத்ரவ்யம் அஜீர்ணமாகயிருக்கையிலும் எப்பொழுதும் கர்மா செய்யக்கூடாதென்று ஏற்படுகிறது. ஆகவே போஜனத்திற்குப் பிறகு தர்ப்பணம் மட்டும் செய்யலாமா வென்பதை இவர்கள் கவனிக்கவேண்டும். நாமோ நிமித்தம் தெரிவதற்கு முன் செய்த போஜனம் வபநதர்ப்பணாதிகளைத் தடுக்காதென்றே சொல்லுகிறோம்.

ப்ரொபஸர் தமது சிக்ஷை 5-வது பக்கத்தில் ‘‘வபநஸு் ஶாஙு்ஷடிகவாக ஶாஙவெஸு்வ ஶாஙிகஉடிணு்யிகாராக ஹாகுஸு் வவநநிஷெயாது ஶாஙிகஉடிணஃ ஶுாமெவவவநம் கஸயடிம்’’ என்கிற தோழப்பர் வாக்யத்தை விசாரம் செய்ய ஆரம்பித்து ‘‘இவிடத்தில் வபநஸு் ஶாஙு்யடிகவாக, என்று தெளியச் சொல்லியிருக்க நாம் இது தர்ப்பணாங்கமான க்ஷௌரமெ

